


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.4.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், 2025–2026 ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை ஆணையர் ஆர். லால்வேனா, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் எம்.விஜயலட்சுமி, 'தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மா.அரவிந்த், மருத்துவப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் பி.உமா மகேஸ்வரி, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் திட்ட இயக்குநர் ஆர்.சீத்தாலட்சுமி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அ.அருண் தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் டாக்டர் சு.வினீத், தமிழ்நாடு மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ.சங்குமணி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் டி.எஸ்.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு. ஜெ.ராஜமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.4.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், 2025–2026ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## தென்னிந்திய ரயில்வே வருடாந்திர நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

# தமிழ்நாடு ரயில்வே திட்டங்களை விரைந்து முடித்திட டி.ஆர்.பாலு எம்.பி. வலியுறுத்தல்!

## பொதுமேலாளர் ஆர்.என்.சிங் தலைமையில் கூட்டம் நடைபெற்றது!

சென்னை, ஏப். 23 -

**திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற ரயில்வே நிலைக் குழு உறுப்பினருமான டி.ஆர். பாலு அவர்கள், நேற்று முன்தினம் (21.04.2025) தென்னிந்திய ரயில்வே பொதுமேலாளர் ஆர்.என்.சிங் தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான வருடாந்திரக் கூட்டத்தில் கலந்து கொண்டு தனது திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியிலும், தமிழ்நாட்டின் பல்வேறு ரயில்வே தொடர்பான கோரிக்கைகளையும் வலியுறுத்தி உரையாற்றினார்.**

### தென்னிந்திய ரயில்வேயின் வருடாந்திரக் கூட்டம்

ஒவ்வொரு வருடமும் தென்னிந்திய ரயில்வே, தான் சேவை அளிக்கும் பகுதிகளின் ரயில்வே தொடர்பான கோரிக்கைகள், நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வருடாந்திர கூட்டத்தை மேற்கொள்ளும். அந்த வகையில் பதினெட்டாவது மக்களவைத் தேர்தல் முடிவடைந்த பின்னர் நடைபெறும் முதல் கூட்டம் இதுவாகும்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு இரயில்வே திட்டங்கள் மற்றும் நலன்கள் குறித்து பல்வேறு தருணங்களில் குரல் எழுப்பி வரும் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற



தென்னக ரயில்வேயின் தலைமை அலுவலகத்தில் நடைப்பெற்ற தென்னக ரயில்வேயின் சென்னைக் கோட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் எம்பிக்கள் டி.ஆர்.பாலு, தயாநிதி மாறன், கதிர் ஆனந்த், செல்வம், சசிகாந்த் செந்தில், கிரிராஜன், கனிமொழி என்விஎன்.சோமு, பொது மேலாளர் ஆர்.என்.சிங் உள்ளிட்டோர் உள்ளனர்.

ரயில்வே நிலைக்குழு உறுப்பினருமான டி.ஆர்.பாலு அவர்கள் கலந்து கொண்டு, பல வருடங்களாக நிலுவையில் உள்ள ரயில்வே தொடர்பான திட்டங்களையும் மற்றும் புதிய கோரிக்கைகளை வழங்கி அவற்றை விரைந்து நிறைவேற்றிடுமாறு வலியுறுத்தினார்.

அதன் விபரம் வருமாறு: -

ஆலந்தூர் மற்றும் மடுவின்கரை பகுதி களை இணைக்கும் பல ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்து வந்த பச்சையம்மன் ரயில்வே கிராசிங் மூடப்பட்ட நிலையில், அதற்கு பதிலாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நடைமேம்பாலம் அமைக்கும் பணிக்கு தென்னிந்திய ரயில்வே கடந்த 13.09.2023 அன்று ஒப்புதல் அளித்திருந்தது அதனை விரைந்து முடித்திட வேண்டும்,

கடந்த 2012ஆம் ஆண்டு ரயில்வே பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்த ஆவடி திருப்பெரும்புதூர் கூடுவாஞ்சேரி புதிய ரயில் பாதைத் திட்டத்திற்கான நிதியை ஒதுக்கீடு செய்து அதை உடனடியாகத் தொடங்கிட வேண்டும்,

மீனம்பாக்கம்(திரிசூலம்) ரயில் நிலையத்தின் சுரங்கப்பாதை கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும்,

ஆலந்தூர் ஏ.ஜி.எஸ். நிதி பள்ளி அருகே பொதுமக்கள் பயன்பாட்டிற்கான நடைமேம்பால கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும்,

தாம்பரம் ரயில் முனையத்தின் 7வது மற்றும் 8வது நடைமேடையில் பயணிகளுக்கான கழிப்பிட வசதிகளை ஏற்படுத்திடவும்,

சென்னை கடற்கரை மற்றும் சென்ட்ரல் ரயில் நிலையம் வரை செல்லும் மின்சாரம் மற்றும் விரைவு ரயில்கள், அம்பத்தூர் ரயில் நிலையத்தில் நின்று செல்லும் வகையில் புதிதாக நான்காவது நடைமேடையினை அமைத்திட வேண்டும் எனவும்,

அம்பத்தூர் ரயில் நிலையத்தின் 1வது மற்றும் 2வது நடைமேடைகளை பயன்படுத்துவதற்கு பொதுமக்கள் ஆபத்தான முறையில் இருப்புப்பாதையை கடப்பதை தடுக்கும் பொருட்டு, ஏற்கனவே உள்ள நடை மேம்பலத்தினை 4வது நடைமேடை வரை நீட்டிக்க வேண்டும் எனவும்,

சென்னை சென்ட்ரல் நிலையத்திலிருந்து அரக்கோணம் வரை செல்லும் விரைவு மின்சார ரயிலானது (வண்டி எண்.66021) அம்பத்தூர் ரயில் நிலையத்தில் நின்று செல்ல வேண்டும் எனவும்,

அம்பத்தூர் ரயில் நிலையத்தை, ரயில்வே முனையமாக மாற்றும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும் ஏலகிரி எக்ஸ்பிரஸ், கருடாதிரி எக்ஸ்பிரஸ், திருப்பதி எக்ஸ்பிரஸ், கோவை எக்ஸ்பிரஸ், பிருந்தாவன் எக்ஸ்பிரஸ், பெங்களூரு மெயில், ஏற்காடு எக்ஸ்பிரஸ், சென்னை எழும்பூரிலிருந்து மும்பை சத்ரபதி சிவாஜி ரயில் நிலையம் வரை செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில்கள், அம்பத்தூர் ரயில் நிலையத்தில் இரு மார்க்கங்களிலும் நின்று செல்ல வேண்டும்.

வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியாவை இணைக்கும் வகையிலும், தமிழ்நாட்டின் தென் பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதுமான இராமேஸ்வரம் மற்றும் புதுச்சேரி வரை செல்லும் புவனேஸ்வர் புதுச்சேரி, புவனேஸ்வர் இராமேஸ்வரம், பிலாஸ்பூர்புதுச்சேரி, பிலாஸ்பூர்ராமேஸ்வரம், புதுடெல்லி புதுச்சேரி, அயோத்தியாஇராமேஸ்வரம் ஆகிய விரைவு ரயில்களை தாம்பரம் ரயில் முனையத்தின் இரு மார்க்கங்களிலும் நின்று செல்ல வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற ரயில்வே நிலைக் குழுத் தலைவருக்கு 25.2.2025 அன்று கடிதம் ஒன்றையும் டி.ஆர்.பாலு அவர்கள் வழங்கியுள்ளார்.

விஜயவாடாவிலிருந்தும் மற்றும் மும்பையிலிருந்தும் இரண்டு தனி ரயில் சரக்குப் பாதைகள் தமிழ்நாட்டின் சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களுக்கு தொடங்கப்பட வேண்டும் எனவும்,

தஞ்சாவூர் ஒரத்தநாடு பட்டுக்கோட்டை மற்றும் மன்னார்குடி மதுக்கூர் புதுக்கோட்டை ஆகிய வழித்தடங்களில் புதிய ரயில்வே பாதைகள் தொடங்கப்பட வேண்டும் எனவும், வேளாங்கண்ணி, திருக்குவளை, திருத்துறைப்பூண்டி வழித்தடப் பணிகள் தாமதம் ஏன் எனவும் கேள்வி எழுப்பினார்.

இந்தியாவிலிருந்து மட்டுமல்லாது உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பக்தர்களை ஈர்க்கும் பிரசித்தி பெற்ற மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால சுவாமி கோயிலிற்கு, புது டெல்லியிலிருந்து மன்னார்குடி வரை புதிய ரயில் பாதை அமைக்கபட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை டி.ஆர்.பாலு அவர்கள், தென்னிந்திய ரயில்வே கூட்டத்தில் வலியுறுத்தினார்.

---

## ஆர்.டி.எஸ்.சரவணன் தலைமை! திருமருகல் தெற்கு ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள்

# பி.எல்.ஏ.2., பி.எல்.எஸ்.சி. தகவல் தொழில்நுட்ப அணி கலந்தாய்வுக் கூட்டம்!

## என்.கௌதமன் - ஆர்.அருள்செல்வம் சிறப்புரை!

நாகை, ஏப். 23 -

நாகை மாவட்டம், திருமருகல் தெற்கு ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், தகவல் தொழில் நுட்ப அணி பூத் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டம் கோட்டூர் ஊராட்சி ஏனநல்லூர் மாரியம்மன் கோயில் அருகே நடைபெற்றது.

கூட்டத்திற்கு திருமருகல் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.டி.எஸ்.சரவணன் தலைமை தாங்கினார். ஒன்றிய நிர்வாகிகள் ஜெகபர் அலி, துரையரசன், பாலையன், காலாசுந்தராஜன், கலியமூர்த்தி, சோமு, ரமேஷ் கண்ணா, மகேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாகை மாவட்ட தி.மு.க. செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், மாநில விவசாய அணி இணைச் செயலாளரும், நாகை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ஆர்.அருள்செல்வம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.இளஞ்செழியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, இளம்.சுந்தர், மாவட்ட அயலா இன்னைக்கு தலைவர் சாதிக் ஜெகபர் மற்றும் மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரால் நாடாளுமன்றத் தொகுதியை குறைக்க முற்படும் ஒன்றிய மோடி அரசை வன்மையாகக் கண்டிப்பதோடு, தமிழ்நாடு வெல்லும் என தி.மு.க. தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நீட் தேர்வுக்கு விலக்கு வேண்டும் என பல முறை வலியுறுத்தியும் செவிசாய்க்காத ஒன்றிய அரசைக் கண்டித்தும்,

தமிழகத்தில் தொடர்ந்து பின்பற்றி வரும் இரு மொழிக் கொள்கையை புறக்கணித்து, ஹிந்தி திணிப்பை ஏற்படுத்தி மும்மொழிக் கொள்கையை பின்பற்ற துடிப்பதோடு தமிழகத்திற்கு வழங்க வேண்டிய கல்வி நிதியை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய அரசை பா.ஜ.க. அரசுக்கு கண்டனத்தை தெரிவித்துக் கொள்வது என்றும்,

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் மசோதாவை நிராகரித்த ஆளுநர் ரவிக்கு எதிராக உச்ச நீதிமன்றம் சென்று, ஆளுநரின் வஞ்சகத்தை தோலுரித்து காட்டி தமிழ்நாட்டின் நியாயத்தை எடுத்துக் கூறியதையடுத்து உச்ச நீதிமன்றம் தமிழ்நாடு அரசின் மசோதாவிற்கு ஒப்புதல் வழங்கி இந்தியாவின் வரலாற்று தீர்ப்பைப் பெற்ற தமிழ்நாடு முதலமைச்சருக்கு வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வது என்றும்,

கழகத் தலைவர் - தமிழக முதல்வருக்கு பாராட்டு தலையும், நன்றியையும் தெரிவித்து கொள்வது என்றும், தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒற்றை செங்கல்லால் ஒன்றிய பா.ஜ.க. அரசை தமிழகம் முழுவதும் ஓய்வில்லாமல் கட்சி வளர்ச்சிக்கு தமிழ்நாடு முழுவதும் சுற்று பயணம் செய்து கட்சி நிகழ்ச்சிகள், அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கட்சி வளர்ச்சிக்கா சிறப்பாக செயல்படும் முக்கியத்துவத்தைக் கருதி தலைமை கழகத்தில் முக்கிய பொறுப்பு வழங்கி சிறப்பித்திட வேண்டு மென்றும்,

2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ள தி.மு.க. 200க்கும் மேற்பட்ட தொகுதியில் வெல்வது என்ற இலக்கை எட்டும் வகையில் தி.மு.க.வினர், தகவல் தொழில் நுட்ப அணியினர் இன்றே தி.மு.க. ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடத்தில் பிரச்சாரம் செய்திட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

---

## டி.கே.டி.மு.நாகராசன் – து.கோபிநாத் – செ.திலகராஜ் – விஜய சிம்மராஜா முன்னிலை!

# திருப்பூர் மத்திய மாவட்டத்தில் இல்லம்தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்த்தல் முகாம்!

## வழக்கறிஞர் ராஜீவ்காந்தி துவக்கி வைத்தார்!

திருப்பூர், ஏப். 23 –

திருப்பூர் மத்திய மாவட்ட மாணவர் அணி சார்பில், இல்லம் தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம், திருப்பூர், கருவம்பாளையம் பகுதி 43வது வார்டுக்குட்பட்ட ஏ.பி.டி. சாலை பகுதிகளில் தெற்கு மாநகரச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத், வடக்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ், தெற்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் விஜய சிம்மராஜா ஆகியோர் முன்னிலையில் கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் ராஜீவ் காந்தி நீட் தேர்வுக்கு எதிரான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி இல்லம் தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாமை துவக்கி வைத்தார்.

செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: –

எடப்பாடி பழனிச்சாமியினுடைய பச்சைத் துரோகத்தை ஒரு சமுக்காளம் போட்டு மறைக்கலாம் என்று அவர் எண்ணிக்கொண்டு இன்று அ.தி.மு.க. அமித்ஷாவின் அடிமைகளாக மாறியுள்ளனர். நீட் தேர்வு காரணமாக சோர்வடைந்து நீட் தேர்வு எங்களுக்கு வேண்டாம் என்று தன் உயிரை மாய்த்துக் கொண்ட, இன்னுயிரை ஈன்ற தமிழ் நாட்டினுடைய மாணவர்களுக்கு அ.தி.மு.க. மாணவர் அணி மெழுகு வர்த்திகளை ஏந்தி கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்ற ஆர்ப்பாட்டத்தை நடத்துகின்றனர். பக்கத்தில் வாய்ப்பு இருந்தால் ஒரு 10 அடி தள்ளி மா.பா.பாண்டியராஜன், எடப்பாடி பழனிச்சாமி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரின் படங்களை மாட்டி வைத்து அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்த வேண்டாம், அவர்கள் வாழ்க என்றாவது கோசம் போடட்டும், காரணம் நீட் தேர்வை கொண்டு வந்தது பா.ஜ.க., நீட் தேர்வு இதுவரை வேண்டுமென்று சொல்வது பா.ஜ.க., நீட் தேர்வு தான் இந்தியாவை உயர்த்தும் என்று சொல்வது பா.ஜ.க., நீட் தேர்வை எதிர்க்கின்ற மாநிலங்களை நீங்கள் தேச துரோகிகள் என்று குற்றம் சாட்டுவது பா.ஜ.க., நீட் தேர்வு வேண்டுமென்று வீதிகள் தோறும் பா.ஜ.க. பரப்புகின்றது.

அந்த நீட் தேர்வை கொண்டு வந்த பா.ஜ.கவுடன் கள்ளக் கூட்டணி வைத்துக் கொண்ட எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தற்போது நீட் தேர்வில் இறந்த மாணவர்களுக்காக அஞ்சலி செலுத்துவது போல் போலியான நாடகத்தை நடத்துகிறார். அ.தி.மு.க. ஆட்சியிலேயே 22 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்ட போது தான் ஆளுகின்ற போதே தடுக்க தெரியாத எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் இன்று அந்த மாணவர்களின் படத்தை வைத்து அஞ்சலி செலுத்தும் ஒரு போலியான நாடகத்தை நடத்துகிறார்.

தமிழ்நாடு அரசு, திராவிட மாடல் அரசு, தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், எங்களுடைய இளந்தலைவர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடர்ச்சியாக மாணவர் அணி, இளைஞர் அணியினரை ஒன்று சேர்த்து இந்தியாவிலேயே எல்லா மாநில முதல்வர்களையும் கூட்டி நீட் கூடாது என்று நாங்கள் போராடுகிறோம், சட்டமன்றத்தில் போராடுகிறோம், மக்கள் மன்றத்தில் போராடுகிறோம், நீதிமன்றத்தில் போராடுகிறோம்.

ஆனால் நீட் வேண்டும் எனறு பா.ஜ.க. சொல்கிறது. அந்த பா.ஜா.கவுடன் கூட்டணி வைத்துக் கொண்டு, பா.ஜ.கவை எதிர்க்க தெம்பும், திராணியும் இல்லாத எடப்பாடி அவர்கள் ஒளியத் தெரியாதவன் தலையாரி வீட்டுக்குள் ஒளிந்தது போல் நீட்டை கொண்டு வந்த பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்துக் கொண்டு வீட்டை எதிர்க்கிறோம் மாணவர்களின் தற்கொலைக்கு காரணம் தி.மு.க. என்று ஒரு பசப்பு வேலையை, ஒரு கள்ளத்தனமான வேலையை எடப்பாடி அவர்கள் செய்து கொண்டிருக்கிறார். அதை அம்பலப்படுத்தும் முகமாக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாணவர் அணி வீதிகள் தோறும் தன்னுடைய பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நீட் தேர்வை கொண்டு வந்த, தமிழ்நாட்டு மாணவர்களை தற்கொலை செய்ய வைத்தது எடப்பாடி எடப்பாடி பழனிச்சாமி தான் என்ற உண்மையை இந்த துண்டுப் பிரசுரங்கள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்க்கிறோம் என்று அவர் கூறினார்.

இதில் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், தெற்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் க.அசோக்குமார், ஆர்.என்.டி. விவேக், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.சசிக்குமார்,

தெற்கு மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.அசோக் குமார், கருவம்பாளையம் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாரப்பாளையம் சிவா, மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் செல்வக்குமார், சுரேஷ் குமார், கௌதம் சிவக்குமார், பிரேம் நாத், வட்டச் செயலாளர்கள் பி.கே.கணேஷ், எஸ்.ஆர்.ரமேஷ், மு.நந்தகோபால், மாணவர் அணி சேக், சந்துரு உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் அனைத்தையும் மாணவர் அணி சாம் கிஷோர் செய்திருந்தார்.